ஶ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

यं शैवास्समुपासते शिव इति ब्रह्मेति वेदान्तिनः
बौद्धा बुद्ध इति प्रमाणपटवः कर्मेति नैय्यायिकाः ।
अर्हन्नित्यथ जैनशासनगताः कर्मेति मीमांसकाः
सोऽयं वो विदधातु वांछितफलं त्रैलोक्यनाथो हरिः ॥

प्राचीनपद्यम् ॥

யாதொருபகவானை சைவர்கள் சிவஸ்வரூபமாக உபாஸிகின்றார்களோ, உபநிடதங்களைப் பிரமாணமாகக்கொண்ட ஆஸ்திகர்களான வேதாந்திகள் யாதொருவரை பிர்மஸ்வரூபமாக உபாஸிக்கிறார்களோ, புத்தருடைய மதத்தை யனுஸரித்தவர்களான பௌத்தர்கள் யாதொருவரை புத்தரென்று ஆராதிக்கிறார்களோ, பிரமாணங்களை நன்கறிந்தவர்களான நைய்யாயிகர்கள் யாதொருவரை கர்மஸ்வரூபமாக உபாஸிக்கிறார்களோ, யாதொருவரை ஜைனருடைய ஸித்தாந்தத்தைப் பின்பற்றியவர்கள் அர்கர் என்று பஜிக்கிறார்களோ, எவரை மீமாம்ஸகர்களும் கர்மாவென்று உபாஸிக்கிறார்களோ, அவ்வித மஹிமைவாய்ந்த மூவுலகத்திற்கும் அதிபதியான ஶ்ரீ மஹாவிஷ்ணுவானவர் உங்களுக்கு இஷ்டமான பலத்தை யளிக்கட்டும்.

உலகில் அனுஷ்டான வித்யாஸத்தாலும், பெயரின் மாறுபாட்டாலும், பற்பல மதங்கள் இருந்தாலும், அந்தந்த மதஸ்தர்களாலும் உபாஸிக்கப்படும் மூர்த்தி ஒன்றே தவிர வேறில்லை. ஆனால், அந்த மூர்த்தியைச் சிலர் சிவன் என்றும், சிலர் பிர்ம்மமென்றும், மற்றும் சிலர் புத்தரென்றும் இவ்விதம் அவரவர்களுக்குத் தோன்றியவாறு பற்பல பெயர்களால் அழைக்கிறார்கள். எவ்விதப் பெயரால் யார் அழைத்தாலும் வ்யக்தி ஒன்றுதான். பல இல்லை. ஆகையால் பெயரின் மாறுதலைக்கொண்டு ஸ்வரூபமும் பலவென்று கருதி அநாவச்யமாய்ப் பெரிது, சிறிது என்று சண்டைக்கு இடம் தேடாமல் அவரவர்களும் பேதபுத்தியை விலக்கித் தங்களுக்கிஷ்டமான பெயரால் பகவானை அழைத்து உபாஸித்துக் காரிய பலத்தை யடைவது நலம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

குரோதன-௵ சித்திரை-௴ ௧௧-௨

வேதாந்தஸாரம்.

(180-வது பக்கத்தொடர்ச்சி)

अस्याज्ञानस्यावरणविक्षेपनामकमस्ति शक्तिद्वयम् ॥

இந்த அக்ஞானத்திற்கு விக்ஷேபமென்றும், ஆவரணமென்றும் பெயர்கொண்ட இரண்டு சக்திகளிருக்கின்றன. ஆவரணசக்தியாவது, மிகவும் அற்பமான மேகமானது அனேக யோஜனை விஸ்தாரமுள்ள ஸூர்யமண்டலத்தைப் பார்க்கும் ஜனங்களுடைய நேத்ரங்களுக்குத் தெரியாமலிருக்கும்படி மறைப்பதுபோல் எங்ஙனம் தோன்றுகின்றதோ, அங்ஙனம் அக்ஞானமானது அற்பமாயிருப்பினும் வியாபகனும், ஸம்ஸாரபந்தமற்றவனும் விளங்கும் ஆத்மாவை அறியவிரும்பும் புத்திகளுக்குத் தெரியாமலிருக்கும்படி மறைப்பது போலுள்ள மிகவும் சிறந்த ஸாமர்த்திய மாகும். இவ்விதமே,

घनच्छन्नदृष्टिर्घनच्छन्नमर्कं यथा मन्यते निष्प्रभं चातिमूढः ।
तथा बद्धवद्भाति यो मूढदृष्टेस्स नित्योपलब्धिस्वरूपोऽहमेव ॥

"மறைக்கப்பட்ட கண்ணையுடைய மிகவும் மூடாத்மாவான ஒருவன் மேகத்தால் மறைக்கப்பட்ட ஸூர்யனை ஒளியில்லாதவனாக எவ்விதம் எண்ணுவானோ, அவ்விதம் அக்ஞானவிருததிருஷ்டியையுடையவர்களுக்கு எவர் பந்தத்தால் கட்டுப்பட்டவர் போல் தோன்றுகிறாரோ, நித்யக்ஞான ஸ்வரூபியாய் விளங்கும் அவ்விதபரமாத்ம ஸ்வரூபம்தான் நான்" என்று ஒரு மஹானாலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

மேலும் நமது பரமாசார்யரவர்களாலும் இதைப்பற்றி அடியில் வருமாறு நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

एषा वृतिर्नाम तमोगुणस्य शक्तिर्यया वस्त्ववभासतेऽन्यथा ।
सैषा निदानं पुरुषस्य संसृतेर्विक्षेपशक्तेः प्रसरस्य हेतुः ॥ 115

ஆவரணம் என்று பெயர்பூண்ட இஃது அக்ஞானத்தினுடைய தமோகுணத்தின் சக்தி, யாதொரு இந்த ஆவரணசக்தியால் வஸ்துவானது வேறாகத்தோன்றுகிறதோ அவ்விதம் பிரஸித்திபெற்ற இந்த ஆவரணசக்திதான் புருஷர்களுக்கு ஸம்ஸார பந்தத்திற்கு முக்கிய காரணம். அக்ஞானத்திலிருக்கும் இரண்டாவதான விக்ஷேப சக்தி பரவுவதற்கும் இதுவே காரணமாகின்றது.

பின்னும்,

विवेकवानप्यतियौक्तिकोऽपि श्रुतात्मतत्त्वोऽपि च पण्डितोऽपि ।
शक्त्या यया संवृतबोधदृष्टिरात्मानमात्मस्थमिमं न वेद ॥ 490

"நல்லது, கெட்டது, பாபம், புண்யம் என்கிற பகுத்தறிவையுடையவனுயிருந்த போதிலும் நன்றாய் ஊகித்தறியும் சக்தி பெற்றிருந்தாலும், சாஸ்திரங்களின் முகமாகவும், பெரியோர்களின் அனுக்கிரகத்தாலும் கேட்கப்பட்ட ஆத்மஸ்வரூபத்தினுடைய தத்வத்தை யுடையவனுயிருந்தபோதிலும் பல வித்வான்களாலும் கொண்டாடக்கூடிய சிறந்த ஞானத்தை யடைந்திருந்தாலும் எவன் இந்த ஆவரணசக்தியால் மறைக்கப்பட்ட அறிவின் தாரையையுடையவனோ அவன் ஆத்மாவை உண்மையான ஆத்மஸ்வரூபமாக அறியமாட்டான்" என்றும் நமது குருசாணுளே கூறியிருக்கின்றார்கள்.

இவ்வித சக்திவாய்ந்த இந்த அக்ஞானத்தினுடைய ஆவரணசக்தியால் நன்கு சூழப்பட்டவனான ஆத்மாவுக்கு, கர்த்துருத்வ, போக்த்ருத்வமும், ஸுக, துக்க, மோஹஸ்வரூபமாயுள்ள மிகவும் துச்சமான ஸம்ஸாரபாவனையும் ஏற்படுகின்றன. எப்படித் தனது அக்ஞானத்தால் மறைக்கப்பட்ட கயிற்றில் ஸர்ப்பம் என்கிற தோற்றமேற்படுகின்றதோ அதுபோல் ஆவரணசக்தியால் மறைக்கப்பட்ட ஆத்மாவுக்கும் தனக்கும் அற்பங்கூட சம்பந்தமில்லாத ஸம்ஸாரபாவனை யுண்டாகிறது.

அக்ஞானத்தினுடைய விக்ஷேப சக்திஸ்வரூப நிரூபணம்.

विक्षेपशक्तिस्तु यथा रज्ज्वज्ञानं स्वावृतरज्जौ स्वशक्त्या सर्पादिकमुद्भावयति । एवमज्ञानमपि स्वावृतात्मनि विक्षेपशक्त्या आकाशादिप्रपञ्चमुद्भावयति तादृशं सामर्थ्यम् ॥

विक्षेपशक्तिर्लिंगादिब्रह्माण्डान्तं जगत्सृजेत् ॥

விக்ஷேப சக்தியோடுகூடிய அவித்தையானது லிங்க சரீரம்முதல் ப்ரும்மாண்டம் வரையிலுள்ள ஜகத்தைச் சிருஷ்டிக்கும் என்று ஒரு கற்றரும் கருதுகிறார்.

எவ்விதம் ரஜ்ஜுவினுடைய அக்ஞானமானது தன்னால் மறைக்கப்பட்ட கயிற்றில் அதிஷ்டானத்திற்கு ஆவரணம் ஏற்பட்டுப் பிரமமுண்டானவுடன் தனது சக்தியால் ஸர்ப்பம் முதலானவைகளை யுண்டு பண்ணுகிறதோ அவ்விதமே மூலாக்ஞானமும் தன்னுடைய ஆவரணசக்தியால் மறைக்கப்பட்ட ஆத்மாவில் தன்னுடைய இரண்டாவதான விக்ஷேபசக்தியால் ஆகாயம் முதலிய பிரபஞ்சத்தை யுண்டு பண்ணுகிறது. இந்த விக்ஷேபசக்திக்கு இவ்வித சக்தியுண்டு. இதைப்பற்றியே:—

विक्षेपनाम्नी रजसस्तु शक्तिः प्रवृत्तिहेतुः पुरुषस्य नित्यम् ।
स्थूलादिलिङ्गान्तमशेषमेतत् यया सदात्मन्यसदेव सूयते ॥

அக்ஞானத்தினுடைய ரஜோகுணத்தின் செய்கையான விக்ஷேப சக்தியானது புருஷனான ஆத்மாவுக்கு எப்பொழுதும் பிரவிருத்திக்குக் காரணமாகின்றது. யாதொரு இந்த விக்ஷேப சக்தியால் தான் ஸத்தாய் விளங்கும் ஆத்மஸ்வரூபத்தினிடத்தில் இல்லாதவைகளான ஸ்தூலம் முதல் லிங்கசரீரம் வரையிலுள்ள சகலப் பிரபஞ்சங்களும் உண்டுபண்ணப் படுகின்றன.

(தொடரும்)

ஆர்யதர்மம் பத்திராதிபர்.

ஹிந்துமததர்மம்.

4 பிரகரணம்.

பிராமணர்களுக்கு யக்ஞோபவீதம் முக்கியம்.

(187-வது பக்கத்தொடர்ச்சி)

யக்ஞோபவீதமானது நம்முடைய மிஞ்சினபுராதனச் சீர் திருத்தக்காரர்களுக்குக் கொஞ்சம்கூடக் கோபத்தைக் கொடுக்கவில்லை. பார்த்தாலேயே அஃது அவர்களுடைய மார்பினுடைய ஆதரவை அனுபவிப்பதாகக் காணப்படுகிறது. ஜாதியேற்பாட்டின் ஆதாரத்தைப்பற்றியாவது அல்லது ஜாதியிருப்பது நியாயமென்றாவது சொல்லபட்ட ஒருவார்த்தை காதில்பட்டமாத்திரத்தில் பற்களை நெருநெரெனக் கடிக்கும் பிரம்மபந்துக்கள்கூடத் தங்கள் தேகத்தில் பூநூலை அணிந்து கொண்டேயிருக்கிறார்கள் என்பது ஆச்சரியமாயிருக்கிறது. நம்முடைய பாரதவருஷத்தின் தர்ம பூமியில் இந்தக்காலத்தில் எங்குபார்த்தாலும் பிராமண தேகத்தினர்களில் சிலர் கத்தரித்த தலைகளோடும், சிலர் புண்ட்ரம் தரிப்பதை வெகுநாளாய் விட்டுவிட்ட பாழ்நெற்றிகளோடும் ஒவ்வொருநாளிலும் ஒவ்வொரு மணியிலும் காணப்படுகிறார்களென்பது நம்முடைய துரதிர்ஷ்டமே. ஆனாலும் ஜாதி ஏற்பாட்டை நிந்திப்பதும் எல்லாரையும் சமத்வம் செய்ய உபதேசிப்பதுமாக இருந்துவரும் பிராமணச் சீர்திருத்தக்காரர்களில் ஒருவன்கூடத் தான்வாயாற் சொல்வதின் உண்மையை அனுஷ்டானத்தில் ருஜுச்செய்யும் பொருட்டுத் தனது தேகத்தில் அணிந்திருக்கும் யக்ஞோபவீதத்தைக் கழற்றி எறிந்துவிட்டு நடமாடுவதை நாம் இதுவரையில் பார்க்கவில்லை. அப்படி அவன் செய்தாலல்லவோ தான் ஜாதியேற்பாட்டை நிந்திப்பது தன்மனசாக்ஷியின் ஆதாரவைப் பின்பற்றியதென்றும் பிராமணஸ்தானத்திலுள்ள தான் இன்னின்ன விசேஷதர்மங்களைச் செய்யக்கட்டுப்பட்டிருப்பதான கொள்கைமுழுவதும் அறிவீனமென்றும்தான் யக்ஞோபவீதம் தரிக்கக் கடமைப்படவில்லையென்று மனப் பூர்வமாய் தனக்கு நம்பிக்கையிருக்கிறதென்றும் அவன் தன்னைச் சேர்ந்த சீர்திருத்தக்காரர்களுக்கும் சிநேகிதர்களுக்கும் உலகத்தோருக்கும்

பிரத்யக்ஷத்தில் நடந்து காட்டுகிறவனுவான். ஜாதியேற்பாட்டை அழிக்கப் பிரதிக்ஷித்துக்கொண்டு அடிக்கடி பெரிய நீதிசபை உத்தியோகத்திலுள்ள பிராமணர்கள் கோஷிக்கிறுர்களே யொழிய அப்படிப் பட்டமுழுச் சீர்திருத்தக்காரர்களில் ஒருவர்கூட மேற்கண்டபடி பூநூல் விஷயத்தில் அதைக்கழற்றி எரிந்துவிட்டு நடமாட முன் வரவில்லையென்பது ஏனோதெரியவில்லை. புண்ட்ரம் தரியாத நெற்றியோடும் கத்தரித்ததலையோடும் இருக்கும் நம் சினேகிதர்களாவது எல்லாவற்றிலும் ஒரேசீராயிருப்பதாய்க் காட்டும் பொருட்டாகிலும் தாங்கள் அப்படி யக்ஞோபவீதவிஷயத்திலும் நடந்து காட்டக்கூடாதா? சிகை புண்ட்ரவிஷயங்களைப் போல் யக்ஞோபவீதத்தைக் கைவிடச் சரிப்படாதென்றும், யக்ஞோபவீதத்தைத தரிக்கத்தாங்கள் கடமைப் பட்டிருப்பதாயும் அவர்கள் பதில் சொல்லும்பக்ஷத்தில் அப்படிக்கடமைப் பட்டிருப்பதான உணர்ச்சி அவர்களுக்குண்டாகக் காரணமென்னவென்று நான் அவர்களை ஒருகேள்வி கேட்கிறேன். அவர்கள் அந்தக்கேள்விக்குச் சரியான உத்தரம் சொல்லச்சரிப்படாமல் தாங்கள் பிராமணர்களின் கும்பலிலிருந்துவர ஆசைமட்டும் கொள்ளும்பக்ஷத்தில் அவர்களுக்கு யக்ஞோபவீதத்தின் அவசியத்தைச் சொன்ன சாஸ்திரமே மற்ற இரண்டாகிய சிகை, புண்ட்ரம் இவைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறதென்பதை நாம் தீர்மானமாய் அவர்களுக்கு எடுத்துக்காட்டலாகும். அவர்கள் தாங்கள் பிராமணர்கள்போல் மேலுக்குக் காட்டிக்கொண்டாலே தங்களுக்குப் போதுமென்றும், பிராம்மண்ய மென்பதைத் தாங்கள் பொருட்படுத்தவில்லை யென்றும் சொல்லும் பக்ஷத்தில் அவர்களுக்கு மனுஷ்யதண்டனை யில்லாவிடினும், அவர்கள் நாணயங்கெட்ட மோசக்காரர்களென்று ஸர்வசக்தியுள்ள ஈசுவரனுல் சூடு போடப்பட்டு நாஸ்திகதுர்க்கதியை அனுபவிக்க வேண்டியதுதான். இந்தவிஷயத்தில் மோசக்காரத்தனத்தைவகிக்கத்துணிந்து போன அவர்கள் அதேவழியாய் மனம் பழகிப்பழகி ராஜ்யத்தின் பிரஜையாகவும், உத்தியோகஸ்தராயும், தேசத்தின் நகரவாஸியாகவும் இருந்து வருவதற்குரிய மற்ற நடவடிக்கை விவகாரங்களிலும் அதுபோலவே மோசக்காரர்களாய் மாறிப்போகமாட்டார்களென்பது என்ன நிச்சயம்.

(2) ஆகிலும் அவர்கள்பேரில் கடுமையாயிருக்க நமக்கு நியாயமிருந்தாலும் அப்படி அவர்கள்பேரில் நாம் கடுமையைக் காட்ட வேண்டாம், ஒருகால் பிராம்மண்யத்தின் யோக்கிதையைச் சரியானபடி மதிக்க அவர்களுககுத் திறமையில்லாமற்போனது பூராவும் அவர்களுடைய பிழையாயில்லாதிருக்கலாம். அவர்கள் தர்மவிஷயத்தில் கெட்டுப்போனதற்குக் காரணங்கள் ஒருகால் தாய்தந்தையர்களாகவும், அல்லது அவர்களைச் சூழ்ந்திருக்கும் சம்பவங்களாகவும், நிச்சயமாய் அவர்களுடைய சந்தர்ப்பங்களாகவும் இருக்கலாம். அவர்களுடைய நிலைமையைப்பற்றி நாம் மனமிரங்கிப் பெரிய பிர்மரிஷி பரம்பரையைச் சேர்ந்த தர்ம் மாத்மபுத்தி இன்னும் அவர்களிடத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் அவர்களில் ஒவ்வொருவனையும் அழிந்துபோகாமல் நாம் கைதூக்கி உதவிசெய்யவேண்டும். அவனுடைய சுபாவ குணத்தை உட்புகுந்து பார்த்தோமானால் அவனிடத்தில் அந்தர்கதமாய் மறைந்திருக்கும் பிராம்மண்யத்தினுடைய தேஜஸ்பொரியை நாம் கண்டுபிடிக்கக் கூடும். அதைக்கண்டு பிடித்து மெதுவாயும் ஸ்திரமாயுமுள்ள நற்போதனை மார்க்கங்களால் பழக்கினோமானால் அஃது உடனேயோ அல்லது கொஞ்சகாலத்திற்குள்ளேயோ மேலெழும்பி ஜோதியாய்ப் பிரகாசிக்கச் செய்யலாகும். அதினால் ஒருவேளை ஞானோதயமுண்டாகி அவன் கடைத்தேறுவது மல்லாமல் மற்றவர்களைக்கூட தத்வஞானமார்க்கத்திற்கு இழுத்துக்கொள்ளும் நிலைமை அவனுக்கு வந்தாலும் வரலாம். வரமுடியாதென்று யார்தான் சொல்லக்கூடும்? அவன் யக்ஞோபவீதத்தைக்கழற்றி எரியாமல் தரித்துக்கொண்டிருக்கிறானே, அதுவே அவன் கடைத்தேறலாமென்று நாம் நம்புவதற்கு ஓர் ஆஸ்பதமாயிருக்கிறது. யக்ஞோபவீதமானது அவன் நேரில் சதாபார்த்துக் கொள்வதற்குச் சாத்தியமாயிருப்பதுபோல அவனுடைய தலைக்குடுமியும், நெற்றியும் அவனால் சதாநேரில் பார்க்கமுடியாத இடத்திலிருக்கின்றனவே என்று நான் மனம் வருந்துகிறேன். அவன் யக்ஞோபவீதத்தைத் தனது மார்பில் பார்க்கும்போதெல்லாம் கொஞ்சம் ஏறினாலும் சரி தாழ்ந்தாலும் சரி, பிராமணதர்மத்தை அவன் செய்தாலும் சரி விட்டு விட்டாலும் சரி தன்னி

டத்தில் த்விஜத்வமும் பிராம்மண்யமும் இருக்கிற தென்பதை அஃது அடிக்கடி அவனுக்கு ஞாபகமூட்டுகின்றது அவன் பிராம் மண்யத்தைத் தெரிந்து கொண்டு கொஞ்சமாவது மதித்தா லும் சரி, மதிக்காவிட்டாலும் சரி, பிராம்மண்யம் போய்விடுமே யென்ற பயத்தினுலோ அல்லது பிராமண சமூகத்திலிருந்து தள் ளிவிடப்படுவோம் என்ற பயத்தினுலோ அவன் பூநூலைக்கழற்றி யெறியாமல் தரித்துக்கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது. இந்தப் பயமிருப்பதுவே அவனுடைய ஆத்மா காப்பாற்றப்படு வதற்கு நாளடைவில் சாதனமாய் முடியலாம். அவன் புத்திசாலி யாயும் ஊகித்துக் கிரகிக்கும் வல்லவனுயுமிருப்பானுனல் பிரம்ம சூத்திரம் எனப்படும் யக்ஞோபவீதமென்பது என்னவென் றும், அதுமுச்சரடு சேர்ந்து பிரம்மமென்று பொருள்படும் பதம் சேர்ந்த பிரம்மக்ரந்தி என்ற முடிச்சுகள் அதிலிருப்பதற்குக் கருத்தென்ன வென்றும், பிரம்மசாரிக்கு ஒற்றைப்பூநூலும் கிர ஹஸ்தனுக்கு இரண்டு அல்லது அதிகமான பூநூல்களும் ஏன் ஏற் பட்டன என்றும், அதை எப்போதும் அல்லது தேவஉபாஸனை கர்மக்கிரியைகள் செய்யுங்காலத்தில் உபவீதமாய்ப் போட்டுக் கொள்ளுவானே னென்றும், ரிஷிகளுக்குத் தர்ப்பணப் பிரீதி செய்யுங்காலத்தில் அதைத்தாவிடமாய்ப் போட்டுக் கொள்ளு வானே னென்றும், பித்ருக்களுக்கும் பிரேதநிருப்தி காலத்திலும் அதைப் பிராசீனுவீதமாய்ப் போட்டுக் கொள்ளுவானே னென் றும் அவனை விசாரித்துப் பார்க்கும்படி நாளாவர்த்தியில் நாம் செய்து விடலாம். முன்பு அடங்காதிருந்தவனும் இப்போது கேட்டு விசாரிக்க ஆரம்பித்திருப்பவனுமாகிய சிநேகிதனுடைய புதிதாய் உதயமாயிருக்கும் அறிவானது யக்ஞோபவீதத்தை ஏன் பிராமணனைக்கொண்டே அவன் தேகசுத்தி மனச்சுத்தியோ டும் அதற்கேற்பட்ட வைதிக மந்திரத்தை உச்சரித்துக் கொண் டேயும் நூற்கச்செய்யவேண்டு மென்பதையும், அந்தமந்திர உச் சாரணையானது யக்ஞோபவீதத்திற்கும் அதைத் தரிப்பவனுக் கும் எவ்வித தத்வபலனைக்கொடுக்கிற தென்பதையும், யக்ஞோப வீதம் தயார்செய்யப்பட வேண்டியதிலும் தரித்துக்கொள்ளப் படவேண்டிய விஷயத்திலும் ஏற்பட்டிருக்கும் இன்னும் அனேக

சாஸ்திரவிதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் தாத்பரியம் என்ன வென்பதையும் உட்புகுந்து விசாரிக்கும்படி பெருக்கும். வாஸ்தவத்தில் அவன் மாத்திரம் பொறுமையோடும், முழுமனதோடும், யக்ஞோபவீதம் என்ற ஒருவிஷயத்தைப் பொறுத்தமட்டிலுமே வெளிவரும் உண்மையின் விளக்கத்தைக் கவனித்துக் கேட்டானால் நம்முடைய ஆரிய தத்வக்ஞான சாஸ்திரத்தின் விஸ்தாரமான உட்பரப்பில் கிரியாம்சத்தில் அவன் ஆராய்ச்சி செய்பவனாய் விடுவான். இதேவிதமாய் உண்மையான ஹிந்துவினுடைய சாதாரண அறிவிற்கெட்டிய இதர விஷயங்களில் வெளியாகும் மற்ற சாஸ்திர உண்மைகளையும் புகுந்து பார்க்கும்படி அவனைச் செய்துவிடும்பக்ஷத்தில் அவனுக்கு மேற்கண்டபடி தத்வக்ஞான ஆராய்ச்சி அதிகரிக்குமென்பதில் தடையில்லை. ஹிந்து சாமாஜிக சாஸ்திரத்தைப்பற்றியும், ஹிந்துமதத்தைப் பற்றியும் ஒரு நிர்த்தாரணை செய்ய ஸ்வயபுத்தியுண்டாவதற்கு எவ்வளவோ கற்றுக் கொள்ளக் கார்த்திருக்கவேண்டிய நம்முடைய நாசகச் சீர்திருத்தக்காரர்களால் அர்த்தமில்லாததென்பதாயும், மூடபக்தி யென்பதாயும் அனேக விஷயங்கள் அவமதிக்கப்படுவதற்கு இப்போது எங்கும் பாவியிருக்கும் அறியாமையும், தெய்வபக்தியின்மையுமே காரணமாயிருக்கின்றன. அந்தச் சீர்திருத்தக்காரர்களில் அனேகர் தலைநரைத்த வயோதிகர்களாயிருந்தும் அவர்கள் அறிவு விஷயத்தில் குழந்தைகளே என்னலாம். அவர்களுடைய குழந்தைத் தனமான உச்சாரணங்களை உண்மையானவையா மதிக்கக் கூடாது.

(தொடரும்)

ராவ்ஸாஹேப் எல். ஏ. ரெங்கசாமிஅய்யர்.

தீண்டாமை விலக்கு.

முன் வியாசத்தில் பொதுவாய் ஜாதிப்பிரிவினையின் அனுகூலத்தைப்பற்றி சற்று விவரிக்கப்பட்டது. இவ் வியாசத்தில் தீண்டாமை விலக்கைப்பற்றி குறிப்பிட்டுக் கவனிப்போம்.

அஹிம்சையும், ஜீவகாருண்ணியமுமே விரதமாகக்கொண்ட மகாத்மாகாந்தியவர்கள் தற்காலம் இவ்விஷயத்தில் முற்பட்டிருக்கிருர்கள். அப் பெரியார் சமீபத்தில் வைக்கம் வந்தபிறகு வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களிலிருந்து பிரம்மஞான சமாஜத்தாரைப் போன்ற ஆசாரத் திருத்தக்காரர்களுக்கும் அவருக்குமுள்ள வித்தியாசங்கள் வெளிப்படையா யிருக்கின்றன. "வர்ணுசிரம முறை சாஸ்திரீயமான ஆதாரத்தைக்கொண்டு ஏற்பட்டிருப்பதாக நான் அபிப்பிராயப்படுகிறேன். தர்க்க ரீதியாகப் பார்க்குமிடத்து அது நியாயவிரோதமானதாகத் தோன்றவில்லை" என்று "யௌவன இந்தியா"வில் வெளியான அவருடைய அபிப்பிராயங்கள் அவருக்கு சுபாவமாயுள்ள ஆழ்ந்த யோசனு சக்தியையும் உண்மை வெளிப்படும்போது அதை மறைக்காமல் ஒப்புக்கொள்ளும் தன்மையையும் உறுதிப்படுத்துகின்றன. ஆனுல் இத் தீண்டாமை விஷயமாய் அவர் கொண்டிருக்கும் உறுதியினுல் அதிலுள்ள நன்மை தீமைகளை நடுநிலைமையிலிருந்து அவர் யோசிக்க முடியாதோவென்று நினைக்க இடமுண்டாகிறது. வர்ணங்கள் எக் காரணங்களால் அவசியமென்று தோற்றுகிறதோ அதே காரணங்களால் தீண்டாமையும் அவசியமென்று தோற்றக்கூடும். ஆயினும் இத்தீண்டாமைவிலக்கு சம்பந்தப்பட்டமட்டில் கேள்விபதில் ரூபமாய் அவர் யௌவன இந்தியாவில் சாங்கோபாங்கமாய் வெளியிட்டு பிப்ரவரி 11-ந் தேதியுள்ள சுதேசமித்திரனில் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரசுரமாயிருக்கின்றன. அவைகளைக் குறிப்பிட்டு இங்கு ஆராய்வோம். அங்குள்ளவைகளில் சில பின்வருமாறு:—

"கே:—தீண்டமையை விலக்குவதைப்பற்றிப் பேசு முன்பு தீண்டாதவரெனப்படுவோர் கல்வியறிவும் சீர்திருத்தமும் அடையவேண்டுமென்பது அவசியமில்லையா?

ப:—தீண்டாமையைப் போக்காவிட்டால் தீண்டத்தகாதவரெனப்படுவோர் கல்வி அறிவோ அன்றி தங்களது வாழ்க்கை முறையைச் சீர்திருத்திக்கொள்ளவோ முடியாது.

கே:—குடிப் பழக்கமில்லாதிருப்பவர்கள் அப் பழக்கமுடையவர்களுடனும், மாமிசபக்ஷணஞ் செய்யாதவர்கள் அதனைச்சாப்

பிடுகிறவர்களுடனும் சேராதிருக்க விரும்புகிறார்கள் என்பது இயற்கையல்லவா? அவ்வாறு அவர்கள் ஒருவருக்கொருவர் சேராமலிருக்கவேண்டுவதும் அவசியமில்லையா?

ப:—அப்படி அவர்கள் சேராமல் தனித்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. மதுபானத்தை அடியோடு கைவிட்டவர்கள் குடிப்பழக்கத்தினின்றும் குடிகார சகோதரர்களை மீட்கும் நோக்கத்துடன் அவர்களுடன் சேர்ந்துறவாடுவதைத் தமது கடமையாகக் கருதுவார்கள். அம்மாதிரியே மாமிசபக்ஷணம் செய்பவரை அப் பழக்கத்தைவிடும்படி செய்வதற்காக அவரது நட்பை மாமிசபக்ஷணம செய்யாதவர் பெற முயற்சிசெய்யக்கூடும்."

இப் பதில்களால் தீண்டாதவரெனப்படுவோரின் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்துவதற்கு அவர்களுடன் சேர்ந்துறவாட வேண்டுமெனக் கருதுகிறார்போலும். இவ் வபிப்பிராயம் சரியாவென்பதை சற்று விசாரிக்கவேண்டும். சாஸ்திரங்களில் முதல் நான்கு வர்ணங்களுக்கும் தர்மங்கள் (கடமைகள்) விதிக்கப்பட்டிருக்கின்றன. தீண்டாதவர்கள் "सर्वधर्मबहिष्कृताः" "எல்லாக் கடமைகளிலிருந்தும் விலக்கப்பட்டவர்கள்" என்று யாக்ஞவல்கியர் குறிப்பிடுகிறார். அவர்களுக்கு சாஸ்திரீய வாழ்க்கையில் நிர்ப்பந்தமில்லை. இந் நிர்ப்பந்தமில்லாமையாலேதான் நிர்ப்பந்தத்துக்குட்பட்ட வகுப்பினர்கள் அவர்களுடன் சேர்ந்துறவாடுவதிலிருந்து தடுக்கப்பட்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தியவர்கள் இந்திரியங்களை யடக்கியாளுந் தன்மை வாய்ந்தவராயிருப்பதைக் கொண்டு அவருபதேசத்தைக் கேட்குமெல்லோரும் அவரைப் போலவே இருப்பார்கள் என்று நினைத்துவிடமுடியுமா? "இவ்வுடல் நீங்கும் காலமுமுண்டு" என்னும் பிரத்தியட்ச உண்மையைக்கூட உணராதபடிச் செய்யும் சாதனங்கள் நிறைந்த இக் காலத்தில் நிர்ப்பந்தமற்ற ஊன் உணவுகளைக் கையாளும் சுதந்தரர்களோடு நிர்ப்பந்தங்களுக் குட்பட்டவர்கள் நெருங்கிப் பழகுவார்களானால் எப் பழக்கம் யாருக்குப் படியும் என்பதை சற்று யோசிக்கவேண்டும்.

மனதை அடக்கி பிரக்ஞையை நிலைநிறுத்துவ தெப்படி யென்று அர்ஜுனனை முன்னிட்டு உலகத்துக் குபதேசம்செய்யும் ஸ்ரீ கிருஷ்ணபகவான்

यततोह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः ॥
ध्यायतो विषयान्पुंस स्संगस्तेषूपजायते ।
संगात्संजायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥
क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशः बुद्धिनाशात्प्रणश्यति ॥

"இந்திரியங்களை அடக்க முயற்சிக்கும் மேதாவியின் மனதைக் கூட அவைகள் பலாத்கரித்து இழுக்கின்றன. விஷயங்களை சிந்திக்கும்போது அவைகளில் பற்று உண்டாகின்றது. அப் பற்றிலிருந்து ஆசையும், கோபமும் மோகமும் ஞாபகக்குறைவும் புத்திநாசமும், நாசமும் வரிசையாயுண்டாகும்" என்கிறார். ஒரு மனிதனின் நடத்தைக்கு சகவாசம் முக்கிய காரணமென்பது சாஸ்திர ரீதியாயும் அனுபவத்தினாலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியது. ஆகையால் நியமங்களுக்குட்பட்டவர் நியமமற்ற பழக்கங்களுடையவருடன் பழகுங்கால் பின்கண்டவையே படியுமென்பதுதான் சாதாரணமாய் ஏற்படுகிறது.

இவ்வபிப்பிராயத்தைச்சற்றுஒப்புக்கொண்டதுபோல் அடுத்துவரும் கேள்வியிலிருந்துவெளிப்படுகிறது. அது பின்வருமாறு:-

கே:—குடிப்பழக்கமுடையவர்களாயும் பிராணிகளைக்கொலை செய்து தின்கின்றவர்களாயும் உள்ளவர்களுடன் மதுபானம்செய்யாதவராயும் மாமிசபக்ஷணம் செய்யாதவராயும் உள்ள பரிசுத்தமான மனிதன் கலந்துறவாடுவதால் அவன் எளிதில் அசுத்தனாக (அதாவது மாமிச பக்ஷணஞ் செய்கின்றவனாகவும் மதுபானம் செய்கின்றவனாகவும்) ஆகிவிடுவான் என்பது உண்மையல்லவா?

ப:—தான் செய்யும் தவறை உணராமல் மதுபானஞ்செய்யும் வழக்கத்தையும் மாமிசஉணவருந்தும் வழக்கத்தையுமுடைய

மனிதன் அசுத்தனாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. ஆனால் கெட்டவர்களுடன் சகவாசம் செய்யும்படி செய்வதனால் கெடுதல் ஏற்படக்கூடுமென்பதை நான் உணரக்கூடும். ஆனால், தீண்டாதவரெனப்படுவோருடன் எவனும் சேர்ந்து உறவாட வேண்டுமென்று கூறப்படவில்லை.

ஆனால் ஆரம்பத்தில் "மதுபானஞ்செய்யும் வழக்கத்தையும் மாமிச உணவருந்தும் வழக்கத்தையும் உடைய மனிதன் அசுத்தனாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை" என்று மகாத்மா காந்தி சொல்லுகிறார். இதை நினைக்குங்கால்,

अन्या मध्यस्य चिन्ता तु विमर्दाभ्यधिकोदया ।

"ஒரு காரியத்தில் ஆஸக்தியுள்ளவரைக் காட்டிலும் நடுநிலைமையாயிருந்து யோசிப்பவருக்குத் தான் உண்மை வெளிப்படும்" என்று வால்மீகி எழுதியபடி இப் பிரசினையில் விசேஷ ஆசக்தி வைத்திருப்பதால்தான் இம்மாதிரி அவர் சொல்லும்படி நேரிட்டதோவென்று நினைக்கவேண்டியிருக்கின்றது. ஒரு சரீரியின் சுத்த அசுத்தத்துக்கு அவன் ஆஹாரமேதான் முக்கிய காரணமென்பதை எவரும் இலகுவில்மறுக்கலாகாது. ஆஹாரத்திலிருந்தே சரீரம் விருத்தியடையவேண்டியிருப்பதால் அதற்குத் தகுந்தபடியே சரீரமிருக்குமென்பது நிச்சயம். மகாத்மா காந்தி சாத்வீக உணவையே உட்கொள்ளுவதால் அவருடைய பிரவிருத்தியெல்லாம் சாத்வீகமாகவே யிருக்கின்றன. சென்னை நகர பரிபாலன சபையாருக்கு அவர் பதில்சொன்னபோது சென்னை தெருக்களிலுள்ள அசங்கியங்களைக் கண்டு மனம் சகியாமல் நொந்து கொண்டார். ஒரு சமயம் மதுபானமும் மாம்சஉணவும் அசுத்தமானவைகள் அல்லவென்று சாதித்தாலொழிய "மதுபானஞ் செய்பவரும் மாம்சம் உண்பவரும் அசுத்தனாகவிருக்கவேண்டுமென்ற அவசியமில்லை" என்ற இவ் வபிப்பிராயம் நிற்காது. "தான் செய்யும் தவறை உணராமல்" என்று பதிலின் ஆரம்பத்தில் ஜாக்கிரதையாக ஒரு விசேஷணம் போடப்பட்டிருக்கிறது. ஒருவன் செய்த குற்றத்திற்கு சிட்சைவிதிக்கும்போதானால் தெரியாமல் செய்தானென்று மன்னிக்கலாம். ஆனால் தெரியாமற்

செய்த மதுபானமும் மாம்ச உணவும் சரீரம் சம்பந்தப்பட்டமட்டில் அவைகளுக்குரிய பலன்களைக்கொடுப்பதினின்றும் பின்வாங்காது. "இயற்கை தயவற்றது" என்று காந்தியே அடிக்கடி சொல்லிவருகிறார். இப் பதிலின் இறுதியில் சற்று உண்மையை உணருகிறாரென்று படுகிறது. "எவரும் சேர்ந்து உறவாடவேண்டுமென்று கூறப்படவில்லை" என்று இங்கு சொல்பவர் மற்றொரு கேள்வியின் பதிலில் "தொடமறுத்தால் அவர்கள் பாவத்திற்குள்ளாவார்கள்" என்கிறார். அக்கேள்வியும் பதிலும் பின்வருமாறு:—

"கே:—பிராமணர்கள், தீண்டத்தகாதவரெனப்படாத ஜாதியினர் நீங்கலாக உள்ள மற்ற வகுப்பாரைத் தொடவோ அன்றி அவர்களுடன் சேர்ந்து சாப்பிடவோ அன்றி கல்யாண சம்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளவோ இல்லாமலிருந்தால் அவர்கள் தீண்டாமை பாராட்டுவதாக உள்ள குற்றத்திற்காளாக மாட்டார்களா?

ப:—அவர்கள் இதர வகுப்பார்களைத் "தொட" மறுத்தால் அவர்கள் பாவத்திற்குள்ளாவார்கள்,"

ஒருவரை ஒருவர் தொட்டுக்கொள்ளவேண்டுமென்பது எதற்கு? சில விசேஷ சந்தர்ப்பங்களில் ஒரே ஜாதியினருக்குள் ஒருவர் தொட்டுக்கொள்ளக்கூடாதென்று விதிகளுண்டு. உத்ஸவங்களிலும் கூட்டங்களிலும் மற்றும் தடுக்கமுடியாத சந்தர்ப்பங்களிலும் பல ஜாதியினரும் கலந்துகொள்ளுவது நிஷேதிக்கப்படவில்லை. ஒரே ஜாதியினராயிருந்தாலும் பழக்கப்படாதவர்கள் சரீரம் மேல் பட்டால் சிலருக்கு கூச்சமுண்டாவது சகஜம். ஆகாரம் நித்திரை முதலிய சரீராவஸ்தைகளில் அவனவனுக்கு பூர்ண சுதந்தரமுண்டு. சுதந்தரத்திற்குப் போராடுபவர்கள் இச் சுதந்தரத்தில் தலையிடுவது தர்மமாகாது.

(இன்னும் வரும்.)

வா. பஞ்சாபகேசய்யர்.

மார்க்கஸஹாயர்.

நிலையற்ற இந்தஸம்ஸார சக்கிரத்தில் உழன்று தபிப்பவர்களைக் காப்பாற்றி மோக்ஷத்தையளிக்க வல்லமையுள்ளது, ஈச்வர பக்தியேயாம்.

संसरणकातराणां संसरणं शांभवीभक्तिः ॥

என்ற ஆன்றோர் சொற்படி, பரமேச்வரபக்தியைச் செய்து, பரலோகமார்க்கத்திற்கு வழிதேடி, மறுபடி இம்மண்ணுலகில் திரும்பிவாராவண்ணம் முயல்வதே அறிவாளிகளின் முக்கியமான கடமையாகும். முன் வியாஸத்தில் பரமேச்வரன் ஐஹிகமான மார்க்கத்திற்குத் துணைவராயிருந்ததை வெளியிட்டோம். இப்போது ஆமுஷ்மிகமான மார்க்கத்திற்கும், ஸஹாயனுயிருந்தார் என்பதை விளக்கிக்காட்டுவோம்.

முன்னொருகாலத்தில் ஆர்யாவர்த்தம் என்ற புண்ணிய பூமியில் ஸாவித்திரன் என்ற ஓர் பிராமமணனிருந்தான். அவன் ஆறு அங்கங்களுடன் நான்கு வேதங்களையும் கசடறக்கற்று சாஸ்திரங்களின் உட்கருத்தையும் நன்கறிந்து, பாஹ்யமாயும், ஆந்தாமாயுமுள்ள சுத்தியைக் கைவிடாது ஒழுங்காகச் செய்து, சிவபக்தனுய் விளங்கினன். அவன் விபூதிருத்ராக்ஷங்களை யணிந்து சிவபூஜை முதலானவைகளைக் குறைவற நடத்திவந்தான். அவன் ஒருசமயம் தனது ஸத்குருவின் ஆக்ஞையை முன்னிட்டு, புண்ணிய தீர்த்தங்களைச் சென்று நீராடி, ஈச்வரதர்சனம் பண்ணிக்கொண்டு, விரிஞ்சிபுரம் வந்துசேர்ந்தான். அங்குள்ள சிவதீர்த்தம் ஸோமதீர்த்தம், கௌரீதீர்த்தம் பிரும்மதீர்த்தம், பாலாறு, என்னும் ஐந்து தீர்த்தங்களில் நியமப்படி நீராடி, விதிப்படி, மார்க்கஸஹாயரைப் பூஜித்து ஸாஷ்டாங்கமாய் வணங்கித் துதித்து நான் ஸசரீரனுகவே, கைலாஸஞ்செல்லவேண்டும் என்று பிரார்த்தித்து, பகவானுக்கு ஈசான திசையில் கைலஸாதிபர் என்று நாமமிட்டு ஓர்லிங்கத்தைத் தாபித்துப் பூஜித்துவந்தான், மேலும் புலன்களையடக்கி, நித்திரை ஆஹாரமில்லாமல் எப்போதும் ஸ்ரீ ருத்திரத்தை ஜபித்துக்கொண்டு ருத்திரகற்ப விதானப்படி,

ஜப, ஹோம தர்ப்பணங்கள் செய்துகொண்டு, தவஞ்செய்யலானான். இவ்விதம் தவஞ்செய்து வரும்போது பதினேறு வருடங்களாயின.

मूर्तिः परतरा ध्येया विमुक्त्यर्थं मुमुक्षुभिः ।
मूर्तिध्यानं विना विद्या परा नैवोपजायते ॥

என்றபடி, முமுக்ஷுக்களாயிருப்பினும் ஸகுணமூர்த்தியின் தியானமில்லாமல் மோக்ஷம்கிட்டாது. மூர்த்தித்தியானத்தால்பகவான் கருணைகூர்ந்தால்தான், அவித்யாநாசகமான ஞானம் உதயமாகும் தியானமில்லாவிடில் அவ்வொளி உதயமாகாது. என்று மூர்த்தித் தியானமும் பண்ணிவந்தான்.

साक्षात्परतरस्यैव वस्तुनः सर्वसाक्षिणः ।
अस्ति मूर्तिः परा शुद्धा स्वतंत्रा पापनाशिनी ॥
तस्यासाधारणी मूर्तिः सांबा चंद्रार्धशेखरा ।
नीलग्रीवा परानंदा प्रमोदा ताण्डवप्रिया ॥

ஸர்வஸாக்ஷியான பரமாத்மவஸ்துவுக்கும், லோகாநுக்ரஹார்த்தமாக, அஸாதாரணமான மூர்த்தியுண்டு. அம்மூர்த்தி சுத்தமாயும் ஸ்வதந்திரமாயும், பாபநாசகமாயும் சந்திரபூஷணமாயும், நீலகண்டரூபியாயும், பேராநந்தவள்ளலாயும், தாண்டவப்பிரியமாயுமுள்ளது என்று தீர்மானித்து, ஸாவித்திரன் தியானித்து வந்தான்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணிய சாஸ்திரீ.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.